1978 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ), (ஆ), & (இ) மோத்தக்கால் கிராமத்தில் உள்ள சர்வே எண் 117-2-இல், 1972 ஆம் வருடம் விவசாயத்திற்கு லாயக்கான 50.63 ஏக்கர் நிலம் 38 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது. அந்நிலத்தில் எஞ்சியுள்ள 455.59 ஏக்கர் பாறை நிலமானதால் விவசாயத்திற்கு லாயக்கற்றவை. இதில் யாதொரு ஆக்ரமணமும் இல்லை.

திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த எனது தொகுதியில், மோத்தக்கல் ஊராட்சிப் பகுதியிலுள்ள சர்வே எண் 117—2-இல் உள்ள தீய புறம்போக்கு நிலத்தை சிலருக்குப் பட்டா செய்து கொடுத்திருப்பதாகவும், மேலும் பட்டா வழங்குவதற்கு அந்த நிலம் தகுதியற்றதாக இருக்கின்றது என்றும் அமைச்சர் அவர்கள் கூறுகிறுர்கள். அந்த தீய புறம்போக்கு நிலத்தில் ஏற்கெனவே சாகுபடி செய்யும் ஏழை விவசாயிகள், அரசு தங்களுக்குப் பட்டா வழங்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறுர்கள். ஆகவே, அந்த தீய புறம்போக்கு நிலத்தை ஏற்கெனவே சாகுபடி செய்துவரும் ஏழை விவசாய மக்களுக்குப் பட்டா வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அங்கே உள்ள மற்ற நிலங்கள் விவசாயத்திற்கு ஏற்றதில்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆனுல், உறுப்பினர் அவர்கள் ஏழை விவசாயிகள் ஆக்கிரமிப்புச் செய்திருப்பதாகக் கூறுகிறுர்கள். ஏழை விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலங்கள், உண்மையிலேயே அரசுக்குத் தேவையில்லாமல் இருக்குமானுல், அந்த நிலங்களுக்குப் பட்டா வழங்குவதிலே எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

திருக்கோவிலூர், விழுப்புரம் வட்டங்களில் மனைப் பட்டாக்கள்.

*வினு எண் 106— திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977—78-ல் தென்னுற்காடு மாவட்டம். திருக்கோவிலூர் , விழுப்புரம் தாலுகாக்களில் வீட்டுமனை பட்டா கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அவற்றுள் எத்தனை நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது?

(இ) தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் எத்தனை?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) 1977–78-ல் (1–4–77 முதல் 31–3–78 வரை) தென்ஞற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் மேலும் விழுப்புரம் வட்டங்களில் வீட்டு மனைப் பட்டா கோரி வந்துள்ள விண்ணப்பங் களின் எண்ணிக்கை:—

விழுப்புரம்	376
திருக்கோவிலூர்	35

(ஆ) வீட்டுமனை பட்டா வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை—

விழுப்புரம்	234
திருக்கோவிலூர்	30

(இ) தள்ளுபடி செய்யப்பட்டமனுக்களின் எண்ணிக்கை—

விழுப்புரம்	116
திருக்கோவிலூர்	5

திரு. வி. கொ. சின்னசாமி : தலைவர் அவர்களே, வீட்டு மனை பட்டா கொடுப்பதில், மொத்தமாக தமிழகத்திலே (மணியடிக்கப் பட்டது).

வெள்ளாற்றில் தூர் எடுத்தல்.

* வினு எண் 107.— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தென்ஞற்காடு மாவட்டம், பரங்கிப் பேட்டை வெள்ளாற்று முகத்துவாரம் அன்னங்கோயில் என்ற இடத்தில் மீன்பிடி படகு உள்ளே வர முடியாமல் மண்மேடிட்டுவிடுவதை தடுத்து ஆழப் படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இல்லை.